உ

சிவமயம்



யாழ்ப்பாணம்—மாவிட்டபுர வாசகரும்

காரைநகர் - இந்துக்கல்லூரி,

யாழ் - கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்,

வசாவிளான்-மத்திய மகாவித்தியாலயம்,

தெல்லிப்பளை - யூனியன் கல்லூரி ஆகியபாடசாலைகளில்

உடற்கல்வி ஆசிரியையாகவும்,

காங்கேசன்துறை - நடேஸ்வராக் கல்லூரியில்

மனையியல் கல்வி ஆசிரியையாகவும்

கடமையாற்றியவராகிய

# திருமதி இராசலட்சுமி நடராஜா

அவர்களின்

# நினைவு மலர்

இராட்சத வருடம் புரட்டாசி மாதம்

1975.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமதி இராசலட்சுமி நடராஜா

அவர்கள்

தோற்றம் : 10-2-1935

மறைவு : 29-8-1975

சொல்லின் திறனுடைமை சோதியுள்ள நல்முகமும்
அல்லன செய்யா அருமனது — நல்வழியே
செல்லும் உறுதியொடு சோர்விலா வாழ்க்கை
நல்லிராச லட்சுமியை நாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்

பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
'சிவாகம வித்யாபூஷணம்' — பிரதம குரு

மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. P. O.

## சமர்ப்பணம்

"ஸாதி பூதாதிதைவம் மாம் ஸாதியக்ஞும் ச யே விது:
ப்ரயாண காலே அபி ச மாம் தே விதுர்யுக்த சேதஸ:"
(ப. கீதை ஞ. வி. யோ. 30)

யார் என்னை அதிபூதத்துடனும் அதிதெய்வீகத்துடனும், அதியக்ஞத்துடனும் கூடினவனாக அறிகிறார்களோ, யோகத்திலே நிலை நின்ற மனதையுடைய அவர்கள், சாகுந் தறுவாயிலும் என்னை அறிகின்றனர்.—இவ்வாறு பகவத்கீதை வசனமுண்டு.

மாவை முருகப்பெருமானைப் பூசிக்கும் போதெல்லாம் யான் வேண்டும் வரங்கள் பலவுண்டு. அவற்றுள், "பக்திநெறி கொண்ட சாத்வீக சமுதாயம் தோன்றவேண்டும்—அதற்காக பெருமானை அருச்சிப்பதற்கு அடியார்கள் மூலம் சுகந்த பத்ரபுஷ்பங்களைத் தருவிக்க வேண்டும்" — என்பதும் ஒன்றாகும்.

ஆலயத்திற்கு வரும்போதெல்லாம் கையிலே அருச்சனைப் பொருட்களும், கூடையிலே சுகந்த பத்திர புஷ்பங்களும், திருநீறணிந்த நெற்றியோடு புன்சிரிப்பும் கூடியவராய் "ஷண்முகனே சரணம்" என்ற தாரக மந்திரத்தையே மெய்ப்பொருளாகக் கொண்டு ஆடி அசைந்து வரும் "ராஜலக்ஷ்மி" இன்று எங்கே!! சந்தான கோபாலருக்கு கருந்துளசி தந்து பூசனை செய்விப்பாளே!! இன்று எங்கே—எங்குமே காணேமே !!

"சூழுதல் வேண்டும்; தாள்கள் தொழுதிடல் வேண்டும்; அங்கை தாழுதல் வேண்டும்; சென்னி துதித்திடல் வேண்டும்; தாலும் ஆளுதல் வேண்டும்; தீமை அகன்று தான் இவற்காளாகி வாழுதல் வேண்டும்" என சதா சிந்தித்து சிந்தித்து வாழ்நாட்களை முருகனுக்கே சமர்ப்பணம் செய்தாளே!! எங்கே அவள்?

கார்த்திகை நக்ஷத்திரத்தன்று பிறந்த அம்மணி கார்த்திகை நக்ஷத்திரத்தன்று மறைந்து கார்த்திகைப் பெண்களோடு இணையச் சென்றுவிட்டாளா!! அல்லது சந்தான கோபாலருக்குத் தவறாது கருந்துளசி கொடுத்ததால், தொடர்ந்துவந்த 'கிருஷ்ண ஜெயந்தியன்று'—கிருஷ்ணபகவானது திருவடிகளைச் சேர்ந்துவிட்டாளா!! எது எதுவாயினும் மாவைநகர் உத்தமிகளில் ஒருவரைக் காணவில்லை. இனியும் காண்போமா? என்பது சந்தேகம்.

இனம் இனத்தைச் சேரும்; தெய்வீகம் தெய்வீகத்தை அடைந்து விட்டது, எங்கும் சாந்தி நிலவுவதாக:

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு" (திருக்குறள்)

— சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

## திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பிவெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றிசயசய போற்றியென்றும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் எனைக் கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கே உலப்பிலாஒன்றே உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர்பளிங்கின் திரள்மணிக்குன்றே சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே அம்பலம் ஆடரங்குஆக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கர மன்றருள்செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்குமந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்துகட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந்தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

திருமகளுலாவு மிருபுயமுராரி திருமருக நாமப் — பெருமாள்காண்
செகதலமும்வானு மிகுதிபெறுபாடல் தெரிதருகுமாரப் ,,
மருவுமடியார்கள் மனதில்விளையாடு மரகதமயூரப் — பெருமாள்காண்
மணிதரளம்வீசி யணியருவிசூழ மருவுகதிர்காமப் - பெருமாள்காண்
அருவரைகள் நீறுபட அசுரர்மாள அமர்பொருதவீரப் பெருமாள்காண்
அரவுபிறைவாரி விரிவுசடைவேணி அமலர்குருநாதப் பெருமாள்காண்
இருவினையிலாத திருவினைவிடாத இமையவர்குலேசப் பெருமாள்காண்
இலகுசிலைவேடர்கொடியினதிபார இருதனவிநோதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இராசலட்சுமி நடராசா அவர்கள் காலஞ் சென்றமை குறித்த இரங்கற் பாக்கள்

### வெண்பா

ஆண்டு இராட்சதவில் ஆவணிசேர் அட்டமிபின்
ஈண்டுபதின் மூன்றும்நாள் ஏர்வெள்ளி — மாண்புமிகு
சீர்ராச லட்சுமியாம் சேயிழையாள் வாழ்வொழி
நாரிபங்கன் றாளடைந்த நாள்

### அகவற்பா

செந்தமிழ்த் துறைவிரி சிறப்புடைப் புலவர்கள்
பரந்து விளங்குயாழ்ப் பாணமாம் தேயம்
வடபுலம் உற்ற வனப்புடை நற்பதி
குன்ற மெறிந்த குமரவேள் மகிழ்வுடன்
மாருதப் புரவீக வல்லிக் கருளி
வரந்தரு நினைவுடன் நிரந்தரம் பயிலும்
வானுயர் கோபுர வனப்புடைக் கோட்டமும்
அம்பிகை வைரவர் ஆனை முகத்தவன்
பொருந்துறு தளிகளும் பொற்பார் மடங்களும்
கமுகொடு தென்னை கதலிமா வருக்கை
தோடைஎலு மிச்சை தூயநற் கரும்பு
விளங்குறு சோலையும் வெற்றிலைத் தோட்டமும்
அருமறை அந்தணர் அருங்கலை பயில்வோர்
உழுதூண் நலத்தில் உயர்ந்திடு சீரியோர்
திகழ்ந்து வாழும் திருவாழ் மனைகள்
வயங்குறு வீதிகள் வனப்புறு மதில்கள்
வளம்பல பொலிந்திடு மாவையம் பதியில்
மாண்புறு இலச்சு மணமேனு மனையில்
மேன்மைகள் பெற்ற வேளாண் குடியில்
சயம்பு நாத முதலிதன் வழிவரு
தம்பை யாவெனுந் தக்கோன் தந்திடு
யாழ்விளை யாட்டுப் பகுதியுத் தியோகத்தர்
நற்குண மிக்க நடராச மகிபனின்
இல்லக் கிழத்தியாய் இனிதுவாழ்ந் தவளே
இராசலட் சுமியாம் இயல்புடை நல்லாள்
உத்தமர் வாழ்ந்திடு உரும்பிராய் தன்னில்
விருந்தினர் போற்றும் வேளாண் குலத்தில்

குணமிகு செல்லரும் குட்டிப் பிள்ளையும்
குலவிய இல்லறக் குறைவிலா வாழ்வில்
உவப்புற உதித்த உத்தம புத்திரி
நீள்மடி நீங்கி நிலமிசைத் தவழ்ந்தும்
குறுகுறு நடந்தும் குமுதவாய் மலர்ந்தும்
புனித மலர்க்கரம் புழுதியில் அளைந்தும்
சிற்றில் புனைந்தும் சிறுசோ றட்டும்
பெற்றோர் மகிழ்வு பொருந்திட வளர்ந்து
உரும்பிராய் இந்து உயர்கல் லூரியில்
செந்தமிழ் ஆங்கிலஞ் சீரொடு பயின்று
பரீட்சையில் தேறி பயன்பெற நினைந்து
தமிழ்நா டதனில் தலைப்பட் டினமாம்
சென்னை நகரந் திகழ்கல் லூரியில்
உடற்கல் விநலப் பயிற்சியிற் தேறி
காரைந கரிந்துக் கல்லூரி தன்னிலும்
கனகரத் தினமகா வித்தியா லயத்திலும்
வசாவிளான் மகா வித்தியா லயத்திலும்
தெல்லியில் யூனியன் திகழ்கல் லூரியிலும்
உடல்நலக் கல்வியின் உயர்வினை ஊட்டி
அதிபர்கள் மெச்ச அரும்பணி புரிந்தும்
பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில்
சிறுமியர் விரும்பும் சிறப்புள பாடமாம்
வீட்டுப் பணியை விருப்பொடு பயின்று
நடேஸ்வரா வெனப்பெயர் நவில் கல்லூரியில்
வீட்டுப் பணியை வியப்புற பயிற்றியும்
மாணவர் பெற்றோர் மதிப்புடை அதிபர்
சகஆ சிரியரும் மெச்சியே புகழ
ஆசிரியத் தொழிலை அகமகிழ் வுற்றிட
பெரும்பணி என்ன விருப்பொடு செய்தான்
இல்லற வாழ்வின் நல்லறப் பயனென
இன்மொழி பேசும் இலட்சும ணராசா
என்னுநற் புதல்வனை இயல்பொடு பெற்று
கல்வியும் உணவும் அன்பொடு ஒழுக்கமும்
தந்து வளர்த்த தயையுடை அன்னை
கணவனைக் கடவுளாய்க் கருத்திடை மதித்து
உண்மை அன்பினால் போற்றிய நங்கை
அம்பிகை சேயோன் அரனடி என்றும்
புந்தியில் மறவாப் பெருந்தவ மாது
எடுத்த பொருளை எவரும் வியப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமதிற் பதிய உரைத்திடும் உத்தமி
உண்மைக் கென்றும் உயர்வினை அளிக்கும்
தூய உள்ளமும் மயக்கறு சிந்தையும்
தெளிவும் அன்பும் திகழ்ந்திடு வார்த்தையும்
பொருந்திய இராச லட்சுமித் தையல்
இராட்சத ஆண்டு இயல்ஆ வணியில்
பதின்மூன் றும்நாள் பகர்வெள்ளி வாரம்
அபரம் அட்டமி கார்த்திகை நாளில்
நாற்பது ஆண்டு நவில்வய தெல்லையில்
நாயகன் அயலவர் நவையறு புதல்வன்
மைத்துனர் சகோதரர் வருந்தியே சோர
புவியினில் வாழ்வை பொய்யென நீக்கி
இறைபத முற்றின் புற்றனளினிதே

## கலித்துறை

தெல்லியிற் துர்க்கை குருத்திகழ் மாவையிற் சேயவன்பால்
சொல்லியல் அன்புடன் தோத்திரம் செய்து தொழுதிடுவார்
நல்லியல் புற்றிடு நடராசன் தான்மகிழ் நல்மனையாள்
மெல்லியல் ராசலட்சுமிப்பாவை சார்ந்தனள் மேற்கதிலே

நல்லார் புகழிராச லட்சுமி யேநின் நகைவதனம்
எல்லார் ஒளியது இற்றிடச் சென்றெவன் சேர்ந்தனையோ
சொல்லார் புதல்வனும் சுற்றமும் சுந்தர நாயகனும்
பொல்லாத் துயர்கொடு பாங்கரில் நின்று புலம்பிடவே

சீரார் நிறையுடைச் சேயிழை கல்விச் சிறப்பதனால்
ஊரார் புகழ்ந்திடும் உத்தமி உண்மை உறுதிபண்பு
சேரார் வழுற்றிடு சிந்தை கடமைத் திறமுடனும்
தாரார் இராசலட்சு மித்தையல் தன்திறம் சாற்றிடுனே

## நாயகன் புலம்பல்

நந்தா விளக்கே நவையில் குலக்கொழுந்தே நாடரிய
சிந்தா மணியே சிறக்குமென் செல்வமே தீங்கரும்பின்
செந்தே னெனமொழி செல்வியே நின்னைப் பிரிந்துமிக
நொந்தேன் புலம்பிடச் சென்றமை நன்றோ நுவலுதியே

## வெண்பா

நின்னுடலம் அக்கினியில் நீறாக வேகுதே
என்மனமும் ஐயகோ என்செய்வேன் — என்மனையும்
பாழ்மனையாய்த் தோற்றமுற பாலன் வருந்தச்செய்
ஊழ்வினைதான் என்ன உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புத்திரன் புலம்பல்

அன்புமொழி பேசி அழைத்து அருகிருத்தி
இன்பமுற நல்லுணவு தானளித்தீர் — அன்னையே
ஆர்வ முகத்தை அணைக்கும் கரங்களையான்
பார்ப்பதுவு முண்டோ பகர்

### தாய் புலம்பல்

அன்பினொடும் பெற்ற அருமகளே உன்றனையான்
இன்பமுறக் காணாது ஏங்குற்றேன் — பண்புடையாய்
அன்னை வருத்தமுற அகன்ற யிதுநன்றோ
துன்பமற மார்க்கமது சொல்

### மாமன் மாமி புலம்பல்

எங்கள் மனம்மகிழ எங்கும் விளக்கொளியாய்
மங்களமாய் இல்லத்தில் மகிழ்ந்திருந்தீர் — பங்கமுற
சென்றீர் ஒளிவதனம் சேர்வார்த்தை நாமிங்கு
நன்றினிக் கேட்பதுண்டோ தான்

### சகோதரர் புலம்பல்

அன்பின் உருவே அறத்தின் இருப்பிடமே
துன்பின் திறமகற்றும் சோதரியே — சென்றனையோ
உன்றன் திருமுகத்தை உயர்ந்த சொல்லழகை
என்றினிக் காண்போ மியம்பு

### மைத்துனர் புலம்பல்

மைத்துனியே எங்கள் மதிசேர் குலமோங்க
வைத்த பெரு வாழ்வுகண்டு மாண்புற்றோம் — இத்தினத்தில்
சென்றீ ரெமைநீத்துச் செங்கமல வாய்திறந்து
நன்றெனவே யோர்சொல் நவில

### தேற்றம்

தொல்லுலகில் வேதன் படைக்கும் உயிர்களெல்லாம்
நில்லாது சென்று நிலைமாறும் — எல்லையிலா
துன்பமிதை யுணர்ந்து தூய்மை யடைந்திடவே
அன்பர் முயல்வா ரறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்திகள்

## திருமதி இராசலட்சுமி நடராஜா அவர்களின்
மறைவைக்குறித்து

## யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன்
வழங்கிய

## அனுதாபச் செய்தி

சென்ற 29-8-1975 அன்று சோகமான சூழ்நிலையில் அகால மரண மெய்திய யாழ். காரியாதிகாரி பிரிவு விளையாட்டு உத்தியோகத்தரின் அன்பு மனைவி திருமதி இராஜலட்சுமி நடராஜா அவர்கள் வீட்டிலும் தொழில் புரிந்த இடத்திலும் கடமையையும் கண்ணியத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்த ஒரு வீரப்பெண்மணியாவாள்.

அவர் தனது இளம்பராயத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் பயின்று பின்பு சென்னை உடற்கல்விக் கலாசாலையில் உடற்கல்வியில் பாண்டித்தியம் பெற்று காரை நகர் இந்துக்கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியையாகச் சிலகாலமும், பின்பு கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒருவருட காலமும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் சிலகாலம் நற்பணிபுரிந்தார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வீட்டுப்பணிக் கல்வியில் பயிற்சிபெற்று காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் 1972-ம் ஆண்டுதொடக்கம் 1975-ம் ஆண்டுவரையும் யாவரும் மெச்சத்தக்க முறையில் அளப்பரிய சேவைபுரிந்தார்.

இவ்வாறு பல்வேறு துறைகளிலும் பயிற்சிபெற்று நிறைவு எய்திய ஒரு பெண்ணின் அகால மறைவு, அன்னாரின் குடும்பத்துக்கும், அவர் கடமைபுரிந்த தாபனத்துக்கும் ஈடுகொடுக்க முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் இவ்வேளையில் அவரின் குடும்பத்தவருக்கும் நெருங்கிய உறவினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. யோகநாதன்
காரியாதிகாரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவமடைந்த
# திருமதி இராசலட்சுமி நடராஜா அவர்கள்

**(திரு. ஆர். எஸ். சிவரத்தினம், இளைப்பாறிய கல்வி அதிகாரி)**

திருமதி இராசலட்சுமி நடராஜா அவர்களை உறவினருக்கும், நண்பர்களுக்கும், அவர்களுடைய மாணவ, மாணவிகளுக்கும் ஞாபகப்படுத்த, இவர்கள் மத்தியில் அவரின் சேவையே போதியதானது.

இவர் உடற்கல்விக்குப் பொறுப்பான ஆசிரியராக பல ஆண்டுகள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் சேவைபுரிந்த காலத்திலே யான் அவர்களின் சேவைத்திறனை நன்கு அறிவதற்கு வாய்ப்புக்கிடைத்தது. அக்காலத்தில் யாவராலும் மதிக்கப்பெற்று, தமது கடமைகளில் மிகவும் கண்ணும் கருத்துமாக சேவை செய்தவர்களில் இவர் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருந்தார். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும், சக ஆசிரிய மாணவரினதும், விரிவுரையாளர்களினதும் நல்லுறவையும், நல்லாசியையும் பெற்று, மிகச்சிறந்த ஆசிரியமாணவியெனவும் பெயர் பெற்றிருந்தார்.

இவர் இளம் வயதினிலேயே இறைவனடி சென்றுவிட்டது எமக்கு ஆறாத் துயரத்தை ஆக்கிவிட்டது. உள்ளத்தால்—சேவையால்—கடமையால் மிக உயர்ந்தவர். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் மகனுக்கும், துணைவருக்கும் என் அனுதாபத்தையும் ஆறுதலையும் கூறுகிறேன்.

அவரது ஆத்மா சாந்தியடைவதாக

திரு. ஆர். எஸ். சிவரத்தினம்

யாழ்ப்பாணம்

---

# மறைந்த மாணிக்கம்

**(நடேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. போ. சோமசுந்தரம்)**

சென்ற சில வருடங்களாக மக்களிடையே பரவிவரும் ஒரு பொதுப்படைக் கருத்து. — 'நடேஸ்வராக் கல்லூரி வளர்கிறது'. கல்லூரி வளரக் காரணமானவர்களிலே சிறப்பாகச் சேவைசெய்யும் திறன்படைத்த ஆசிரியர்கள் பலர்.

அண்மைக்காலத்திலே கல்லூரியின் வளர்ச்சிக்கு மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, கருமமே கண்ணாகக் கடமையாற்றி, ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழையமாணவர், யாவரது மதிப்பையும் பெற்று விளங்கியவர் திருமதி. ராஜலட்சுமி நடராஜா. வீட்டுப்பணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியையாக நியமனம் பெற்று வந்தபோதிலும், பல்வேறு துறைகளில் அயராது, அலுக்காது, ஆர்வத்தோடு உழைத்த உத்தமர் இவ்வாசிரியை.

வீட்டுப்பணி, விளையாட்டுத்துறை, மாணவர் ஒழுங்கு, பகுதிநேர வகுப்பு இத்தியாதி துறைகள் யாவற்றிலும் இவர் ஒரு தனித்துவத்துடன் சிறப்பாகச் செயலாற்றி பலரின் பாராட்டுக்களைப் பெற்றவர். கற்பித்தலானாலும், விளையாட்டுப்பயிற்சி ஆனாலும்சரி, பொது விசேட நிகழ்ச்சிகளானாலும்சரி, ஆலயத் தொண்டானாலும் சரி, எந்தத் துறையிலும், எந்தநேரத்திலும் எந்தவேலையைக் கொடுத்தாலும் மனங்கோணாது, பொறுமையாக, ஒரு குறையும்விடாது செவ்வனே செய்து முடிக்கும் ஆற்றல் மிகுந்த ஆசிரியை.

பக்தியால் சிறந்து, பண்பால் உயர்ந்து, பரோபகாரம், கருணை உள்ளம் ஆகியவற்றால் பரிணமித்து, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஆகியவற்றால் மேம்பட்டு, ஆசிரியர் குழாத்திற்கு ஓர் ஒளியாய், ஒளிக்கு உறைவிடமாய், மிளிர்ந்த இவ்வாசிரியை ஆயிரமாயிரம் பிஞ்சு உள்ளங்களின் நெஞ்சு குமுற, ஆசிரியத் தோழர் தோழியர் ஆற்றொணுத்துயர்க்கடல் மூழ்க, பெற்றாரும் உற்றாரும் உள்ளந்துடிக்க திடீரென இம்மாய உலகைவிட்டுப் பிரிந்தமை தாங்கமுடியாத ஓர் அனுபவம்;

விதி யாரைத்தான் விட்டது! தன் பூதவுடலை நீத்தாலும், இவ்வாசிரியை இக்கல்லூரியின் வளவாழ்விலே நீக்கமற நிறைந்து, தன் அளப்பருஞ் சேவையால் அதன் சரித்திரத்திலே அழியாத இடம் பெற்று அமரத்துவம் அடைந்துள்ளார் என்றால் அது மிகையாகாது, ஆயினும் காலச்சுழலிலே சிக்குண்டு, பற்பல இன்னல்கள், இடையூறுகளை யெல்லாம் கடந்து வளர்ந்துவரும் இவ்வேளையிலே இக்கல்லூரியில் இத்தகைய ஆர்வம்மிக்க செயல்திறன் வாய்ந்த தியாகஉள்ளம் உடைய தன்னலமற்ற ஒரு சிறந்த சேவகியை இழந்துவிட்டதே என்று எண்ணும்போது மிகுந்த கவலையாக இருக்கிறது.

கல்லூரிமுன்றிலிலே அருளாட்சிசெலுத்தும் அன்னை புவனேஸ்வரி மேல் அயராத பக்தி கொண்டிருந்த இவ்வாசிரியை அவ்வன்னையின் பாதங்களைச் சென்றடைந்து விட்டாள், கொடுப்பவளும், கொள்பவளும் அவள் என்ற நம்பிக்கையில் ஆறுதல்பெற முயற்சிக்கிறோம்; ஆசிரியையின் ஆத்மா சாந்திபெற அன்னையின் அடிக்கமலங்களை இறைஞ்சி நிற்கின்றோம்.

இதேவேளையில் இல்லத்தரசியாக இலங்கிய இவ்வாசிரியையை இழந்து நிற்கும் அவர் அன்புக்கணவர் திரு. நடராஜாவிற்கும், அருமை மகன் செல்வன் லட்சுமணனுக்கும், ஏனைய உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கல்லூரி சார்பிலே சமர்ப்பிக்க விரும்புகிறோம்;

பொ. சோமசுந்தரம்

# மறைந்த ஆசிரியைக்கு அஞ்சலி

(செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி)

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யெனும்
பெருமை யுடைத் திவ்வுலகு"

"இளமையும் யாக்கையும் செல்வமும் நிலைநில்லா" என்பதை அடிக்கடி எமக்கு உணர்த்துகின்றான் இறைவன். இந்த உணர்வை எமக்கெல்லாம் ஊட்டிவிட்டு மறைந்துவிட்டார் திருமதி இராசலட்சுமி நடராஜா அவர்கள். அன்பானவாழ்வும் பண்பானநடத்தையும் உரமான உள்ளமும், தொண்டுசெய்யும் ஆர்வமும் ஒருங்கமைந்த இவ்வாசிரியையின் பிரிவு கல்வியுலகுக்கு ஈடுசெய்ய முடியாத நட்டமாகும். ஆசிரியப்பணியை உத்தமப்பணியாகக் காட்டிவைத்தவர். கடமையைக் கண்ணாகப் போற்றி வாழ்ந்தவர். சொற்சோர்வுபடா மாண்புடையவர்: விளையாட்டுத்துறை மனையியற்றுறையில் விசேடபயிற்சி பெற்றவர் என்றெல்லாம் போற்றற்குரியவர். இவருடைய அஞ்சாநெஞ்சும் கடமையிற் கண்ணும் கருத்துமாக விளங்கும் மாண்பும் நாமனைவரும் நேரிற் கண்டவையே.

மற்றொரு சிறப்பையும் நாம் மறக்கமுடியாது: பக்தியுள்ளம் வாய்க்கப்பெற்ற ஆசிரியையாக இவர் விளங்கினார். விரதங்களை மேற்கொள்வதும், வழிபாடுகளை ஒழுங்காக ஆற்றுவதும் இவருடைய வாழ்க்கையில் நாம் கண்டு போற்றிநின்றோம்.

இன்று எமது மதிப்புக்குரிய ஆசிரியை எம்மத்தியில் இல்லை: அவவைப் பிரிந்து ஆசிரிய உலகம் தவிக்கிறது. அருமைக்கணவனும் அவர்பெற்ற புதல்வனும் கண்ணீர் வடிக்கின்றனர்: சுற்றம் துயருற்று நிற்கிறது, என்னே! கூற்றுவன் இயல்பு. இவ்வுலகில் சேவை செய்வார்க்கு இடமில்லையா? என்று பெருமக்கள் ஏங்க இவர் உயிரைப் பிரித்துவிட்டானே காலன். ஆனால் என்னசெய்வோம். அனுப்பியவன் அழைத்தால் தடுப்பதற்கு நாம் யார்?

எனவே இந்தத் துன்பவேளையில் ஆசிரியை அவர்களைப் போற்றி அஞ்சலி செலுத்துவது எமது கடனாகும். அவர் நாமம் வாழ்க! சேவை நிலைபெறுக. தெய்வீக வாழ்வு மறுமைக்கு வழிகாட்டுக என்று போற்றி அஞ்சலி செலுத்துகின்றோம்.

தங்கம்மா அப்பாக்குட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரத்தில் ஒருவர் தான் உன்போல் இருப்பரம்மா

(ஆசிரியை செல்வி. கலாதேவி சுந்தரமூர்த்தி)

நடேஸ்வராக் கல்லூரிக்கு நற்பணி புரிய நீவிர்
மனையியல் ஆசிரியையாக எழுபத்து இரண்டில் வந்தீர்!
எழுபத்து ஐந்தில் எந்தன் நினைவில் உம் வாழ்வைவிட்டு
ஏங்கி நான் நிற்க, சென்றீர் எல்லையில் கோட்டுக்கப்பால்;
உன்னுடன் உடன்பிறவா தங்கையாய் நின்று உன்தன்
உதடுகள் உதிர்க்கும் என்பேர் 'கலா' 'கலா' காதில் கேட்க
உணர்ச்சியைத் தேக்கி இந்த கவிதை மாலையையே உந்தன்
அமரத்துவ நிலைக்கு அன்பாய் அர்ப்பணிக்கின்றேன் இன்று.

காலையில் கல்லூரிக்கு கையினில் மலர்கள் தாங்கி
அம்மனின் வாயில் தன்னில் அர்ப்பணித் தொழுதெழுந்து
கடமையைத் தொடங்கும் உன்தன் காட்சியே எமக்கு எல்லாம்
பெருவிருந்தம்மா உண்மை புனைந்துரையல்ல அல்ல;

நல்ல ஆரம்ப மென்றும் நற்பயன் தரு மென்பார்கள்
அந்த ஓர்நிலையின் நின்று அருமையாய் முடிக்கும் உன்தன்
கடமைகள் கண்டோம் இன்று செய்திறன் போற்றுகின்றோம்
சென்னியும் தாழ்த்துகின்றோம்;
G. C. E. பரீட்சை தன்னில் மனையியல் எடுக்கும் எல்லா
மாணவ மணிகளுக்கும் சித்தியைச் சேர்த்துவைக்கும்
உத்திகள் பலவே கொண்ட உன்தனின் உயர்ந்த நல்ல
கற்பித்தற் திறன் தானென்னே!

வகுப்பறை தனிலே நீங்கள் கொலுவுடன் இருக்கும் காட்சி!
விரட்டியும் மிரட்டி நல்லாய் வேலைதான் வாங்கும் காட்சி
நாட்டுது நடப்பை விண்டு வர்ணித்துக் கதைகள் கூறி
மாணவர் தம்மை எல்லாம் புடம் செய்யும் புதுமைக்காட்சி
எமக்கெல்லாம் வியப்பதம்மா விரும்பியே போற்றுகின்ற
விந்தைகள் அம்மா உண்மை.

கடமையைச் செய்யும் வேளை கருத்தற்று முரண் செய்வோரை
கலங்கவே கண்டனங்கள் கடுமையாய் கக்கும் நீர்தான்
கண்ணது கலங்கி நின்றால் கட்டியே அணைத்து மெச்சி
புத்திகள் கூறி உச்சி தன்னிலே உயர்த்தும் மாட்சி
உன்தனின் சக்தியம்மா உவக்க வல் உத்தியம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுப் போட்டியென்றால் உன்தனின் ஆர்வம் காண்போம்
ஒழுங்குகள் செய்ய நீங்கள் ஓடிடும் ஓட்டம் காண்போம்
உற்சாக மூட்டி அங்கும் இங்குமாய் உலவும் காட்சி
ஆழமாய் பதிந்துளத்தில் நிழலாட்டம் போடுதம்மா!

பரிசளிப்பு விழாவதுவா? விளையாட்டு அரங்கதுவா?
உயர் வகுப்பு மாணவர் இராப் போசன மதுவா?
ஆசிரிய கழகத்து விருந்து வைபவமா?
உங்கள் கைவண்ணம் எம்மைக் கிறங்க வைக்கும்
தித்திக்கும் பண்டங்கள் தீஞ்சுவை பலகாரங்கள்
வண்ண வண்ண வகையில் வடிவாக வழங்குவதில்
உங்கட்கு நிகர் யாரம்மா? நம்மிடத்தில்
நாமுண்ண, புன்முறுவல் பூத்து மனமகிழும்
உன்தன் திருவதனம் என்றம்மா காண்பமினி
எண்ண வழிந்தோடுதே கண்ணீர்த் திவலைபல;

ஆசிரிய கழகத்தில் அங்கத்துவம் வகித்தாய்
ஈராண்டு காலங்கள் இணையற்ற சேவைசெய்து
பொருளாளர் பதவிக்கு பெருமையது தான் சேர்த்தாய்;

கல்லூரி வாழ்க்கைக்கு கன ஊக்கம் தந்ததுபோல்
உன்தன் உற்றார்க்கும் உரமூட்டியே நின்றாய்
அழகான மனையெழுப்பி அதைச் சுற்றிப் பயிர்வளர்த்து
இனிய ஒரு சூழலை இதமாகத் தானமைத்து
உன் நினைவை அதில் நாட்டி உயருலகம் சென்றிட்டாய்,

'அம்மா' என அழைக்கும் உன் மகவைக் காண்கின்றேன்
உன் 'கடமை' மெச்சிநிற்கும் கணவனைக் காண்கின்றேன்
மாவிட்ட புரத்திலே மருமகளாய் நீ வாழ்ந்த மகத்துவத்தை
மாமியார் மனமிரங்கிக் கூற மனமகிழ்ந்து கேட்கின்றேன்
ஆயிரத்தில் ஒருவர் தான் உன்போல் இருப்பரம்மா!

நல்லவர்க்கு நல்லவராய் வல்லவராய் வாழ்ந்தீர் நீர்
தக்க சமயத்தில் மிக்க உதவிகளை கைகொடுத்துக் காப்பேன்
கலங்க விடமாட்டேன் என்று தென்பு கூறி
உரமூட்டும் உளமறிவேன் நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு என்றும் நேரிய நெறியில் நீர் நின்றீர்
கூரிய அம்பென சுட்டியே பிழைகளை மாரிபோல் நன்மைகள் செய்தீர்
இவையெல்லாம் மேன்மக்கள் பண்பம்மா மேதக்கோர் குணமம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பின் சிகரமாய் பாரினிலே வாழ்ந்தீர்கள்
ஆத்மீக வாழ்வுக்கும் வழிவகுத்து நின்றீர்கள்
மாணவக் கந்தனு! துர்க்கா தேவியா!
புவனேஸ் வரித்தாய் கொலுகொண்ட தலமதுவா!
ஓடுவாய் பாடுவாய் அடி அளித்து வழிபட்டு
ஆண்டவன் சந்நிதியில் அர்ப்பணித்து இன்புறுவாய்.

அம்மா உன் வாழ்வுநெறி அகிலத்தை ஈர்க்கும் நெறி
எம்மால் இயன்றவரை ஏற்று ஒளி வீசுவமே;

கலாதேவி சுந்தரமூர்த்தி.

---

# நான் அறிந்த
# திருமதி இராசலட்சுமி நடராஜா

## ( செல்வி நா. சங்கரப்பிள்ளை )

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒன்றாக வைக்கப்பட்டுவிட்ட எனதருமைச் சகோதரியே! உமது திருவுருவம் மறைந்து, ஈமக்கிரியைகளும் இடப்பெற்றுவிட்ட இவ் வேளையிலுங்கூட உமது பிரிவை நம்பமுடியாமல் ஏங்கித்தவிக்கின்றதே எனதுள்ளம். நடந்துமுடிந்துவிட்ட இப்பரிதாப சம்பவம் கெட்ட சொற்பனமாக மாறி, எம் சகோதரி இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடாதா என்று அடிக்கடி எண்ணத் தோன்றுகின்றதே!

கடந்த ஆறேழு ஆண்டுகளாக என்னுடனும் என் குடும்பத்தினருடனும் நெருங்கிய உறவுபூண்டு, அன்புச்சகோதரியாகவும், உற்ற தோழியாகவும், சிறந்த ஆலோசகராகவும் வாழ்ந்து, எமதுள்ளத்தில் உமக்கென ஒரு தனியான இடத்தை வகுத்துக்கொண்டு "வாழ்வே மாயம்" என்பதை நிலைநாட்டிச் சென்றுவிட்டீரே. உமது மணி மொழிகளின் ஓசை இன்னும் எங்கள் காதுகளை விட்டு அகலவில்லையே!

கண்ணின் கருவிழிபோற் காத்து வளர்த்த உமது கனிமகனை — ஒருமகனை எப்படியம்மா மறந்துசென்றீர்? அவனுக்காக அரும்பாடு பட்டு அல்லும்பகலும் உழைத்து, ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கக் காத்திருந்த உமதுள்ளம் மறந்து — மறைந்துசென்ற விந்தை தான் என்னே! தெய்வபக்தியும், கடமையுணர்ச்சியும், சாந்தமும் ஒருங்கே உருவாய, உமது அன்புக்கணவரின் நலனுக்காக அயராது பாடுபட்ட நீர், அவரை நட்டாற்றிற் தத்தளிக்க விட்டுச்சென்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே? அந்தோ! பாபம்! கலங்குகின்றூர்! கலங்குகின்றூர்!! கலங்குகின்றூர்!!!

பள்ளி வாழ்க்கையிலும் உமது நற்பண்புகளால் அதிபரின் நன் மதிப்பையும் — உடன் ஆசிரியர்களதும், மாணவர்களதும் அன்பை யும் பெற்று, மெய்வருத்தம் பாராது, கடமை, கண்ணியம், கட்டுப் பாடு என்னும் பண்புகளுடன் திகழ்ந்த நிலை எம்மால் மறக்கற்பாலது;

உமது கட்டான உடலமைப்பும், கம்பீர நடையழகும் கண்களி னின்றும் அகலமாட்டா; குடும்பசமேதராய் "ஸ்கூட்டரில்" உலா வரும் அழகுப் பவனியைக் கண்டோர் கூட்டம் கவல்கின்றதே. அன்றியும், நீவிர் தேடிய சொத்துக்கள், அலங்கரித்த கைப்பொருள் கள், அன்பூட்டி வளர்த்த அரிய பிராணிகள், பொலிவிழந்து, நிலை குலைந்து நிற்கின்றனவே;

நீவிர் அனுட்டித்த விரதங்கள், வழுத்திய தெய்வங்கள் அதி விரைவில் உம்மை அமரராக்குமென நாம் காத்திருக்கவில்லையே. உமது கல்லூரிப் புவனேஸ்வரி அம்மாளுக்கு நிதமும் மலரும், பாலும் உவந்தளித்த நற்பணியைத் தொடர்ந்தாற்ற யாரை அமைத்துச் சென்றீரோ?

எம் அனைவர் உள்ளத்திலும் அணையா மணிவிளக்காய் ஒளிகான்று நின்ற உமது அன்பு நினைவுகளை எங்ஙனம் மறப்போம் — எப்படி ஆறுவோம். என்னே உலகம்! என்னே வாழ்வு!! தலைவிதிப்பயனைத் தடுக்க வல்லார் யார்?

அன்புச் சகோதரியே உமது ஆன்மா சாந்தி அடைவதாக,

சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

நா. சங்கரப்பிள்ளை.

---

# "இல்லறச் செல்வி"

(ஆசிரியர், திரு. சி, அம்பலப்பிள்ளை)

திருமதி இராசலட்சுமி நடராஜா அவர்கள் காலன்கைப்பட்டார் என்றசெய்தியை அறிந்ததும் அதனை என்னல் நம்பமுடியவில்லை; அவர் எமது சமுதாயத்தில் எல்லோர் உள்ளங்களிலும் நிலையாக வாழ்வார் என்றே நான் கருதுகிறேன். அவரிடம் கற்ற மாணவர் களுடைய மனத்திலும் அவர் நிறைந்து நிற்பார். தமக்குவேண்டிய வர், வேண்டாதவர் என்ற வேறுபாடின்றி அன்புள்ளங்கொண்டு எல்லோருக்கும் அவர் தம்மாலான உதவிகளை வேண்டிய நேரங்களிற் சோர்வின்றிச் செய்தவர், தமது உறவினர் தேவைகளைத் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையெனக் கருதிச் செயலாற்றி வாழ்ந்தவர்; உறவினர் வீடுகளுக்கு அடிக்கடி சென்று கலந்துரையாடி மகிழும் இயல்பினர்; பழகுதற்கு இனியவர்; பண்புமிகுந்தவர்; சுற்றந்தழுவி விருந்தோம்பும் ஒழுக்கமுடையவர்; தமது மாமியார் நோயுற்றவேளை அவருக்குச் செய்த பணிவிடைகளை நான் நேரிற்கண்டு வியந்தேன். அவரை நினைவு கொள்ளும்பொழுது,

கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை — விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
உறுப் போடுணர் வுடையாள் பெண்

என்றபாடல் நினைவுக்கு வருகிறது.

இவரின் சொந்தவூருக்குப் பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமாகக் கடமையாற்றச் சென்றபொழுது வேறிடங்களில் போசன ஒழுங்கு செய்யவேண்டாமென்றுதடுத்து எனக்கும் நண்பர் கனகசுந்தரம் அவர்களுக்கும் அங்கு கடமையாற்றிய காலத்தில் அறுசுவை உண்டி உதவி ஆறுதல் செய்தமையை என்றுமே என்னால் மறக்கமுடியாது. உடல் நலத்துடன் மனையியற் கலையும் கைவந்தவர்களாகத் தமது மாணவர்கள் விளங்கவேண்டுமென்று விடாமுயற்சியுடன் அக்கலையைக் கற்பித்த சிறப்புடையவர். ஆசிரிய இலக்கணங்கள் பொருந்தியவராய் உறவினரும் பிறரும் பிழைவிடும் நேரங்களில் அன்புள்ளங் கொண்டு நேரே கண்டித்து நல்வழியில் நடக்கச்செய்தவர்;

பாடசாலையிற் கடமையாற்றும் நேரந்தவிர்ந்த மற்றைய நேரங்களில் வீட்டுக்கடமைகளை முன்மாதிரியாகச் செய்தும் சமூக சேவை செய்தும் "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்ற கூற்றுக்கிணங்க எல்லாச் செல்வமும் நிறைய வாழ்ந்தவர்; எனது மருகரை மணந்தமையால் எனக்கு உறவினராயமைந்த இராசலட்சுமி அவர்களைக் காலங்கருதிக் காலன் கவர்ந்தமை ஆற்றொணாத் துன்பத்தை விளைவிக்கிறது. விதிவலியை யார்தாம் வெல்லவல்லார்? அவருடைய ஆன்மா சாந்தியடைக.

மானிடர்தம் சட்டைகளை மாற்றியணிவதுபோல்
தானுயிரும் பல்லுடலம் தானெடுக்கும் — வானிற்
குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே
உடம்போடு யிரிடை நட்பு.

சி. அம்பலப்பிள்ளை

# உள்ளத்தில் ஒளிரும் சுடர்

(கல்லூரி மாணவ மாணவியர் சார்பில்,
செல்வி க. திருநாவுக்கரசு)

இழப்பு என்பது அனைவரின் வாழ்க்கையிலும் தவிர்க்கமுடியாத ஒன்று. ஆனால், எமது நடேஸ்வராக் கல்லூரியைப் பொறுத்தவரை திருமதி நடராஜாவின் இழப்பு பேரிழப்பாக அமைந்து விட்டது. ஆம்! மனையியல் பயிலும் மாணவியருக்குப் பேரிழப்பு, விளையாட்டுத் துறைக்குப் பேரிழப்பு; கல்லூரியின் ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டிற்கும் பேரிழப்பு. மாணவ தலைவர் குழுவுக்கும் அது பேரிழப்பு.

நாம் இழந்துவிட்ட அரிய ஆசிரியையின் நினைவால் எழும் இவ் வரிகள் அவர்தம் ஆத்ம சாந்திக்காக அர்ச்சிக்கப்படும் மலர்களாகட்டும்;

அன்னையே!

பாடசாலைகளின் பருவ விடுமுறை என்பது தற்காலிகமான ஒரு பிரிவுதானே! ஆனால், உங்களைப் பொறுத்தவரை நிரந்தரமான பிரிவாக, என்றும் காணமுடியாத பிரிவாக அல்லவா அமைந்துவிட்டது. இவ்வுலகிற்கு நீங்கள் அணைந்த ஜோதி. ஆனால், எம் உள்ளத்திலோ அணையாத தீபச்சுடர்: உங்களைப்பற்றிய நினைவலைகள் என்றும் பசுமையாக, எம் இதயத்தின்கண் பரந்துள்ளன. அந்நினைவுகளால் எழுந்த வேதனை உள்ளமெங்கும் வியாபிக்க, உள்ளத்தின் நிலையறிந்த விழிகள் உங்களுக்காக, உங்கள் ஆத்துமசாந்திக்காக நீரைச் சொரிகின்றன.

அக்கண்ணீர்த் திவலைகள் உங்கள் மலரடிகளுக்குக் காணிக்கையாகட்டும்;

க. திருநாவுக்கரசு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி. நடராஜா 'இலட்சுமணன்,' மாவிட்டபுரம், தெல்லிப்பளை உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், 20 இலக்க 5 ஆம் குறுக்குவீதியில் வதியும் நீக்கலஸ் யேம்ஸ் அவர்களால் யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்று 25-9-75இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org